# எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ. வெ. ர. கிருஷ்ணசாமி


உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றும்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினூரும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம் ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.


18 MAY 1968



கனவு 11 கற்பனை 5] திருச்சி 15—5—68 [ தனிப் பிரதி 25 காசு


# வள்ளலார் கண்ட சமுதாயம்

[இளங்கம்பன்]

★

[லால்குடி சன்மார்க்க சங்க சார்பில் மேதகு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் பாடியது]

### இறை வாழ்த்து

காக்கின்ற வேலவனே! கன்னியுமை பாலகனே
நோக்கிற் கினிக்கும் நுண்ணியனே — ஊக்கிடவே
பூக்கும் கடம்பணிந்த பூம்பழனி யாண்டவனே
வாக்கில் நலமருள வா !

### தமிழ் வாழ்ந்து

முந்திப் பிறந்தவளே! முச்சங்கம் கண்டவளே
சிந்திக்கும் நெஞ்சில் சிறப்பவளே — வந்திக்கும்
சேயான யானும் சிரமுயர்த்தி நிற்பதெலாம்
தாயே! உனை நம்பித்தான் !

### இராமலிங்க வள்ளல் வாழ்த்து

கல்லாரும் கற்றாரும் காதல் பெருக் கோடு
வல்லானை வாழ்த்தி வளம்பெறவே — நல்லருட்பா
தந்தவனைத் தாகம் தணித்தவனை உய்விக்க
வந்தவனை வாழ்த்தாதோ வாய்.

பன்மார்க்க மென்னும் படுகுழியில் ஆழாமல்
நன்மார்க்க மொன்றை நயந்தளித்தான் - நன்நெஞ்சே
சாதி குலமற்ற சன்மார்க்கம் கண்டவனைச்
சோதிராம லிங்கமெனச் சொல்.

காயைக் கனியாக்கும் கருணை வடிவாகித்
தாயைப்போல் அன்புடனே தண்ணமுதப் பாவடித்தே
மக்கள் மனம்புகுத்த மாண்புடைய பேராசான்
பக்குவம் சேர்வாழ்வாலே பாரைக் கவர்ந்திழுத்த
வள்ளல் வடலூரார் வாழ்வியலின் சீர்பாட
உள்ளக் களிப்புடனே ஒன்றுகி வந்துள்ள
வாணர்க் குழுவதனை வாழ்த்தும் பெருந்தலைவ !
காணரிய உண்மைகளைக் காட்டும் கவியரசே !
எட்டி இருக்கின்ற எமையெல்லாம் ஈர்த்தாளும்
ரெட்டியார், எனும் கவிதை ரெத்தினமே ! நற்றமிழில்
ஆர்த்தே அகம்பறிக்கும் அன்புப் பெரும்புலவ !
கீர்த்தி மிகுந்தொளிரும் கீரனெனும் பேராள !
அயிலைத் தமிழ்ச் செழிய ! ஆன்றதெனும் நம்தமிழில்
குயிலைப்போல் பாடவந்த கோலக் கவிமணிகாள் !
சன்மார்க்க சார்புடைய சான்றோரே! ஆன்றோரே!
நன்மார்க்க கவிகேட்கும் நல்லவையீர் உமைஎல்லாம்
தண்டெடுத்த தமிழ்முருகன்; தலைத் துறையும்
[இளங்கம்பன்
தண்டனிட்டுக் கும்பிட்டுத் தலைவணக்கம்
[சாற்றுகிறேன்.
பால்குடிக்கும் சிறுமகவும் பைந்தமிழைக் கேட்கவரும்
லால்குடிக்கு வருவதென்றால் லாபம் அதிகம்தான்.
கீரன் விருந்ததுதான் கிடைக்கும் என்பதல
சீருயர்ந்த உம்மையெலாம் சேவித்தே இன்பமுறும்
வாய்ப்பும் பெரிதன்றோ? வாய்க்காத பேறன்றோ!
வாய்மொழியால் அப்பேற்றை வாழ்த்த முடிந்திடுமோ?
அரங்கத்தின் நாயகனார் ஐயாவின் வாழ்வது வோர்
சுரங்கத்தைப் போன்றதெனச் சுதிகூட்டி வைத்தார்கள்.
சன்மார்க்க சமுதாயச் சால்பை விளக்குமுனம்
இன்றைக்கு நம்முன்னே இருக்கின்ற சமுதாயக்
கோல நலங்களையும் கோணல் செயல்களையும்
நீலித் தனங்களையும் நிலைமாறும் நிலைகளையும்

ஈரம் சிறிதுமின்றி இதயத்தைக் கல்லாக்கிக்
கோரம் விளைவிக்கும் கூனிச் சதிகளையும்
கூற முடிந்திடுமோ? கொல்லுகின்ற ஆயுதங்கள்
பாரைப் பயமுறுத்தும் பாதகத்தைச் சொல்வதுவோ?
பக்கத் திருப்போர்கள் படுதுன்பம் பெரிதெனினும்
துக்கிக்கும் மனமின்றித் தூரத்தில் ஓடுகின்ற
இழிவான செயல்களையே எங்கெங்கும் காண்கின்றோம்.
எழிலான அன்பதனை, ஏற்றமிகு கருணையினை
எள்ளளவும் கொள்ளாமல் எங்கோ அதையொதுக்கிக்
கள்ள மனத்தோடு காலத்தைப் போக்குகின்ற
மாந்தர்களின் வாழ்வை மனங்கொண்டே பார்க்குங்கால்
பாந்தமற்ற அவர் வாழ்வுப் பரிதாபம் பெரிதாகும்!
அன்பை வெறுத்தொதுக்கி அலகையென வாழ்கின்றோம்
சென்னையிலே நடந்ததொரு செய்தியினைச்
[சொல்கின்றேன்
அவனும் நம் சோதரன்தான் அடிபட்டுக் கீழ்
[விழுந்தான்
எவரெவரோ சாலையிலே ஏற்றமுடன் சென்றார்கள்
மெத்தப் படித்தவர்கள் மேலோர்கள் நூலோர்கள்
பத்திரிகை எழுத்தாளர் பலர் சென்றார்; ஆனாலும்
ஐயோ! பாவமென அவனுக்குத் துணை புரிய
மெய்யுணர்வு கொண்டதொரு மேலோரும் வந்தாரோ?
ஓர் மனிதன் கூட ஓடி வந்து தூக்கவில்லை!
பார் கொண்ட அன்புப் பஞ்சத்தைப் பாருங்கள்!
இந்தத் துயரம்ஓர் இதயத்தைத் தொட்டதுவே!
அந்தப் பெருமனத்தின் ஆன்மநேயந்தன்னை
எந்த விதத்தில்யான் எடுத்தே உரைத்திடுவேன்
வந்தவளோ பெண்ணாள். வளமில்லாள் தோடுகளை
அந்தக் கணத்தில் அடகாக்கிப்பணம்பெற்றாள்
நொந்தே கிடந்தவனை நொடிப் போதில் காப்பாற்றி
அந்தமிலாப் புகழுக்கு ஆளானாள்! அவளும்யார்
குந்தமனை யில்லாக் கூலிப் பிழைப்பாளி.
மற்றவர்கள் கொள்ளாத மாண்பார்ந்த கருணையினால்
கற்றவரை எல்லாம் கன்னியவள் வென்றிட்டாள்
இன்றைய நம்சமுதாயம் இருக்கின்ற காட்சிகளில்
ஒன்றை எடுத்துரைத்தேன். ஒருகோடி சொல்லிடலாம்
அன்பில்லா மாந்தர்களின் அரக்க மனத்தாலே
துன்பங்கள் பூக்கின்ற தொடர்கதையும் நீங்காதோ?
என்றெண்ணும் போதெல்லாம் எம்மான் நம் வடலூரார்
அன்புச் சமுதாயம் அரும்பாதோ என்றிசைப் போம்!
நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகனார்
[வார்த்தையெனத்
தேனுரையாம் அருட்பாவில் தித்திக்கப் பாடியவர்
வாழையடி வாழையென வந்ததிருக் கூட்டமதில்
ஏழையனும் ஒருவனென எடுத்தே நமக்குரைத்தே
வள்ளலார் கண்டிட்ட வழுவில்லாச் சமுதாயம்
எல்லோரும் ஒன்றென்னும் ஏதமிலாச் சமுதாயம்
ஒத்தாரும் தாழ்ந்தாரும் உயர்ந்தாரும் ஒன்றுவார்
எத்தாலும் அழியாத ஏற்றத்தைக் கொண்டாள் வார்
பித்தான சாதிமதம் பேய்வருணச் சிரமங்கள்
கொத்தாமல் கொத்தும் கூக்குரல்கள் பிரிவினைகள்
ஒன்றும் அங்கில்லை: ஒன்றியமாய் வாழ்கின்ற
அன்புச் சமுதாயம் அவர்கண்ட சமுதாயம்
பொல்லா உயிர்க்கொலையைப் புறக்கணித்த
[நன்மனத்தார்
எல்லாரும் அங்கே எழிலன்பின் வடிவந்தார்.
அகத்தே கறுத்ததுடன் ஆக்கையினை வெளுப்பாக்கிச்
சகத்தை அழிக்கின்ற சண்டாளர் ஆங்கில்லை!
கலையுரைத்த கற்பனையே கண்கண்ட காட்சியெனும்
நிலைகெட்ட மாந்தர்களின் நீசங்கள் அங்கில்லை.
வாடியநெற் பயிருக்கு வாடுகின்ற மனத்தார்கள்
நாடிவரும் எளியோர்க்கு நல்லுயிரை ஈயாரோ?
கொடுஎன்றே கெஞ்சுமொரு குரலங்கே கேட்பதில்லை
இடுகின்றேன் என்றுரைக்கும் இறுமாப்பும் அங்கில்லை
கள்ளத் தனத்தாலே கள்ளத் தனம் சேர்த்தே
வள்ளல் தனம் செய்யும் வழுவெல்லாம் அங்கில்லை
வட்டி யெனும் சொல்லுக்கு வாய்த்த பொருள்
[யாதென்பார்
கொட்டி வழங்கிடவே கொண்ட நிதி என்றிடுவார்
கொட்டோடும் முழக்கோடும் கோலங்கள் காண்பவரும்
பட்டோடும் பணியோடுப் பகட்டிக் களிப்போரும்
பசியோடு வந்தாரைப் பார்க்காமல் சாலையிலே
விசையோடு செல்கின்ற வித்தகர்கள் அங்கில்லை!
எளியாரை வலியார்தாம் எண்ணம்போல் துன்புறுத்திக்
களிக்கின்ற கொடுமைநிறை காட்சியெலாம் அங்கில்லை
மருவும்பெண் ஆசையினால் மனம்போன படியாடும்
பருவமிலார் நாடகங்கள் பாதகங்கள் அங்கில்லை!
ஒருமையுடன் இறையடியை உன்னுகின்ற உத்தமர்கள்
பெருமையதே பெருமையெனப் பேரின்பம் கண்டிடுவார்
நலிவான பலதெய்வம் நாட்டிக் களிக்கின்ற
பொலிவில்லாச் செயல் அங்கே போந்திடவும்
[வழியுண்டோ?
நேய நெகிழ்ச்சியிலே நெஞ்சுருகும் பான்மையிலே
தூய பணிபுரிய துடிக்கின்ற தொண்டர்களாய்
ஆணினமும் பெண்ணினமும் அறியாத சிறு மகவும்
பேணி நலங்காக்கும் பேரின்பச் சமுதாயம்
என் மார்க்கம் உன் மார்க்கம் என்றே உரைக்காமல்
சன்மார்க்க மொன்றே சகமார்க்கம் என்றுரைக்கும்
நீர்மையிலே பூக்கின்ற நிலையான சமுதாயம்
பேரார்ந்த வள்ளலவர் பேரன்புச் சமுதாயம்
வான மழைபோல வாழ்வைப் பிறர்க் காக்கும்
மோன சமரசத்தில் மூகிழ்க்கின்ற சமுதாயம்
இன்னும் விளக்கியதன் இயல்பையெலாம் சித்தரித்தால்
விண்ணுல போன்றதுதான் விளங்குமென்று
[சொல்லிடலாம்
ஆளுமந்த சமுதாயம் அரும்பிச் செழித்திடவே!
நாளும் உழைத்திடுவோம் நாம்.

—★—




கனவு 11] கீலக, வைகாசி (15-5-68) [கற்பனை 5

# ஈருடல் ஓருயிர்

மனிதன் உண்ணும் உணவு ரஸமாகி, பின் இரத்தமாகி உடலை இயக்கும் சக்திபெறுகிறது. மணமக்களை வாழ்த்தும்போது "ஈருயிரும் ஓருடலும் போல வாழ்வீர்களாக என்று வாழ்த்துகிறோம்." உண்மையில் ஒரு உயிரில் இரண்டு உடல்கள் இயங்குகின்றன. ஒவ்வொரு மனித உயிரிலும், வெளியுடல் ஒன்றும் நுண் உடல் ஒன்றும் இயங்குகிறது. நுண் உடல் இயங்கினால்தான் வெளியுடல் செயல் படுகிறது. வெளியுடல் இயக்கம் மனிதன் உயிர் வாழவும், நுண் உடல் இயக்கம் மனிதனை மனிதனாக வாழ வழி செய்கிறது.

வெளியுடலை உணவு சத்து இயக்குகிறது. இதனை அன்னத்தால் ஆன உடல் இயக்கம் என்கிறோம். நுண் உடலை சிந்தனை இயக்குகிறது. சிந்தனை இல்லாத மனிதன் மனித உடல் படைத்திருந்தாலும் மனிதனாவதில்லை. வெளியுடலை பருவுடல் என்றும் குறிப்பிட்டு பேசுவது மரபு. பருவுடல் ஏது காரணத்தாலோ நாற்றமெடுத்தால் பக்கத்தில் இருக்க எவரும் சம்மதிக்கமாட்டார்கள். இருப்பவர்களுக்கு உடல் நாற்றம் வேதனையைத்தரும்.

மனிதனின் நுண் உடல் நாற்றமெடுத்தால் பக்கத்தில் இருப்பவர் மட்டுமல்ல வெகு தொலைவில் இருப்பவர்களுக்கும் நாற்றம் சகிக்கமுடியாது. அதுமட்டுமல்ல. இனி பிறக்கப் போகிறவர்களுக்கும் அந்தத் துயரம் தொடும். எனவே தான் மனித மனத்தின் நுண் உடல் வைத்தியர்களாக சிந்தனையாளர்கள், கலைஞர்கள், அறிஞர்கள், மேதைகள் தங்கள் சேவைகளைத் தொடங்கினார்கள்.

வெளியுடல் விரும்பும் பொன் பொருள் எதை வேண்டுமானாலும் துய்த்து மகிழ்வாயாக. ஆனால் நுண் உடலில் எவ்வித காயமும் ஏற்படாமல் பாதுகாப்பாயாக! உள் உடலில் காயம் ஏற்பட்டுவிட்டால் அதனை ஆற்றுவது கடினம்; அதனை காயப்படுத்திக் கொள்ளாமலும் பிறர் உள் உடலைக் காயப்படுத்தாமலும் இருப்பதே ஞானம் என்றும் தெரிவித்தார்கள்.

தன் உள் உடலைக் காயப்படுத்திக் கொள்வதும், பிறர் உள் உடலைக் காயப்படுத்துவதான செய்திகளைத் துறப்பதே துறவு என்றும் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். குடும்பத்தை விட்டுக் காட்டுக்கு ஓடுவது துறவு அல்ல. மனித சமுதாயத்தை விட்டு தனித்து வாழ்வது துறவு அல்ல. சமுதாயத்திலே இருந்தாலும், எவர் உள் உடலையும் மாசு படுத்தாமலும் தன்னை மாசு படுத்தும் சக்திகளை துறந்து நிற்பதுவே துறவு ஆகும்.

வாழ்வியலில், ஆதங்கமின்றி பொறுமையோடு, நேரிய வழியில், மனதில் வஞ்சகமின்றி செயல்படுவது உள்ளுடல் வளர்வதற்கு உரியவழி. தீயதற்ற லட்சியங்களும். செயல்களும் நிறைந்த சுய உணர்வுடன் செயல்படும் போது உள்ளுடலும், வெளியுடலும் சமமாக இயங்குகிறது. அப்பொழுது ஈருடலும் ஒருயிருமாக உயிர் இயக்கம் சம இயக்கமாக இயங்கும்போது நாம் கல்லாத கல்வி நம்மில் வெளிப்படும். கற்ற கல்வியெல்லாம் பலிதமடையும். அழிந்து போகக் கூடிய வெளியுடல், அழியாத தன்மை உடைய உள்ளுடலை செப்பனிட்டு வைத்துவிடும்.

உடலை பொய் என்று சொல்பவர்கள் உண்டு. அழிந்து போகக் கூடியது பொய். எனவே உடலை "காயமே இது பொய்யடா" என்று தெளிவாகச் சொன்னார்கள். உள் உடல் அழியாத தன்மை உடையது; உள் உடலை அழியாத அமர நிலைக்கு உயர்த்த முடியும்; எனவே இவ்வுடலை "மெய்" என்ற பதத்தால் குறித்தார்கள்.

எனவே வாழ்வில் நமக்குக் கிடைத்திருக்கின்ற இவ்வுடலை பொய்யாக்கி விடாமல் மெய்யாக்குவோம்: சிந்தனையை வளர்ப்போம். தீங்கற்ற எண்ணங்களால் உள் உடலை வளர்ப்போம். தூயதான செயல்களால் நுண் உடலை விஸ்தாரமாக்குவோம். அது நமக்கு உலகத்து உண்மையை விளக்கும். "மாசற்ற கொள்கையை மனத்தில் அடைத்தால், ஈசனைக் காட்டும் உடம்பு" என்கிறார் ஔவை பிராட்டியார். ஔவை பிராட்டி காட்டிய செந்நெறியிலே சிந்தனையை வளர்த்து அமரத்தன்மை அடைதல் எளிதான வழி என்பதை செந்தமிழ் காட்டுகிறது. செந்தமிழ் சிந்தனை வழி சென்று பார்க்க தமிழ் மக்களை அன்புடன் தமிழ் எழுத்தாளன் அழைக்கிறான். தமிழ் உயர, தமிழர் உயர தமிழ் சிந்தனை உயரும், அதன் மூலம் இத்தாரணியும் உயரவேண்டும். என்பதுதான் எழுத்தாளன் ஆசை.

*அ. வெ. ர. கிருஷ்ணசாமி,*

---

## ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலில்
## அனாதைச் சிறுவர்களுக்குப் புகலிடம்.

திருச்சி, திருப்பராய்த்துறையிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண குடில் என்னும் ஸ்தாபனம் தமிழக அனாதைச் சிறுவர்களுக்கென்றே ஏற்பட்டுள்ள தர்ம ஸ்தாபனமாகும். ஷ அனாதைச் சிறுவர்களுக்காகவே இந்த ஹைஸ்கூல் படிப்பு வரை பள்ளியும், படிப்பு முடிந்தபின் தொழிற் பயிற்சிபெற இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிடியூட்டும் நடத்தப்பட்டு வருகிறது. உணவு, உடை, இருப்பிடம், கல்வி, தொழிற் பயிற்சி முதலானயாவும் முற்றும் இலவசம்.

இங்கு இப்பொழுது சுமார் 300—சிறுவர்கள் வரை புகலிடம் பெற்று வாழ்ந்து வருகிறார்கள். மேற்கொண்டும் சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு வருகிறோம். வருடம் பூராவும் எந்தச் சமயத்தில் அனாதைச் சிறுவர்கள் வந்தாலும் எடுத்துக் கொண்டுதானிருக்கிறோம். ஆனாலும், பள்ளியாண்டுப் பருவகாலமாகிய மே, ஜூன் மாதங்களில்தான் அதிகமான சிறுவர்கள்சேர நல்ல வாய்ப்பிருக்கிறது.

"தமிழகத்தில் தாய் தந்தை இருவருமே யில்லாத திக்கற்ற நிலையிலுள்ள அனாதைச் சிறுவர்களே இல்லை' என்ற நிலையை ஏற்படுத்த முயற்சிக்கும் இலட்சியத்தில் குடில் சேவை செய்து வருகிறது. ஆகையால், தாய்' தந்தை இருவருமேயில்லாத, திக்கற்ற நிலையிலுள்ள அனாதைச் சிறுவர்களை மட்டுமே (தாயோ, தந்தையோ யாரோருவர் இருந்தாலும் வேண்டாம்) 9 வயது முதல் 14 வயது வரையுள்ளவர்களாகவும், அவர்களுடைய படிப்பு நிலை 4-வது வகுப்பிலிருந்து ஹைஸ்கூல் படிப்பு வரை உள்ளவர்களாகவும், இவர்களை தமிழகத்தில் யார் கண்டாலும் அத்தகைய சிறுவர் களைப்பற்றி முழு விபரங்களுடன் முதலில் இங்கு விண்ணப்பம் அனுப்பி வைத்தால், அதற்கான பாரம் வகையரு இங்கிருந்து அனுப்பி வைக்கப்படும் என்பதை அன்புடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

தலைவர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண குடில்,
திருப்பராய்த்துறை (அஞ்சல்)
திருச்சி மாவட்டம்.

# கம்பனும் - துளசியும்

[ அருட்கவி அரங்க சீனிவாசன் ]

வான்மீகி வடமொழியில் யாத்த இராம காதையை நாட்டிற்கும் காலத்திற்கும் ஏற்ப, பற்பல நயங்கள் ஏற்றி நல்கினான் கம்பன். பின்னர் வந்த துளசிதாசர், அதே இராம காதையைப் பாமரரும் பயன்பெறுமாறு வழக்கு நடையில், அழகான செய்யுட்களால் இந்தி மொழியில் அருளினார்.

துளசிதாசர் தமது நூலைத் தொடங்குகையில், வான்மீகியையும் கம்பனையும் கற்றுத் தெளிந்தே தொடங்கினார் என்பர். குமரகுருபரர் வடநாட்டில் வாரணாசியில் வதிந்த காலை, அவரிடம் கம்பனை முழுமையும் அறிந்தார் துளசி என்றும் கூறுவர். இதை மறுப்பாரும் உண்டு. ஆனால் கம்பனுடைய கருத்துக்கள் பல துளசியில் இடம் பெற்றுள்ளன.

முனிவன் வேள்வி காக்கச் சென்ற இராமனும் இலக்குமணனும், தாடகையைக் கொன்று அகலிகையை ஆட்கொண்டு நேரே மிதிலையரசன் சபை புக்கனர் என்பர் வான்மீகி. கம்பரோ, மிதிலை நகரில் நுழையும்போதே உப்பரிகையில் பெண்ணலம் பழுத்த சீதையைக் கண்டு கண்ணோடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்று உண்ணவும் இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர் என்று கூறுகின்றார். வான்மீகி, கம்பன் ஆகிய இருவரையும் பின்பற்றிய துளசி இருவருக்கும் பொதுவான ஒரு வழியைக் கையாள்கின்றார்.

கோசிகனும் இராமனும் இலக்குமணனும் ஜனகபுரியில் அழகிய ஒரு பொழிலில் வந்து தங்கினர். முனிவரின் வருகை யறிந்த ஜனகன், தன் பரிவாரங்களுடன் அவர்கள் இருந்த சோலையின்கண் எய்தி, முனிவரை வணங்கி வரவேற்றான். அப்போது பொழிலெழில் காணச் சென்ற இராம இலக்குமணர் அவ்விடம் வர, அவர்கள் அழகில் ஆழ்ந்த மன்னன். அவர்களை 'யார்'? என வினவினான். முனிவர் அறிமுகம் செய்துவைத்த பிறகு, அவர்கள் மூவரையும் நகருக்குள் அழைத்துச் சென்றான். நகரமாந்தர், இராம இலக்குவர் அழகு கண்டு வியந்து, தங்களுக்குள் பலவாறு பாராட்டிப் பேசலாயினர். அன்றிரவு ஜனகன் விருந்தினராகத் தங்கினர் முனிவரும் இராம இலக்குவரும்.

பொழுது புலர்ந்தது. காலைக்கடன்கள் முடித்த இராம இலக்குமணர், முனிவர் பூசனைக்குப் பூக் கொணரப் பூம்பொழில் புக்கனர்.

வசந்தகாலம். பலவகை வண்ணத் தருக்கள்; மண்டபம் போலப் பின்னிக் காட்சி தரும் பலநிறக் கொடிகள்; கற்பக மரமும் நாணும்படி புதுத்தளிர் போர்த்து, பூமலர் பூத்து, பொற்கனி காய்த்து, நற்சினை சாய்த்துப் பொலிந்தன மரங்கள். பூவை, குயில், கிளி முதலிய புள்ளினம் குதித்துக் கூவிக் களிக்க, மயில்கள் நடனம் ஆடின. நவமணிப் படிகள் கொண்ட நறும் புனற் பொய்கை. அதில் பளிங்கு போல் விளங்கும் தெண்ணீர். நீரிலே மலர்ந்த நெட்டிதழ்த் தாமரை. நீர்ப் பறவைகளின் ஆர்ப்பரிப்பு. கருவண்டுகளின் களியிசை.

காவலரிடம் அனுமதி பெற்றுப், பூசைக்காக மலர் கொய்துகொண்டிருந்தனர் இருவரும். அப்போது சீதை, தாய் சொல் தலைக்கொண்டு பார்வதி தேவியைப் பூசிக்க, எழில் மிக்க எண்ணில் தோழியர் இன்னிசைபாடி இருமருங்கும் வர பொய்கைக் கரையிலமைந்த தேவி கோயிலுக்கு வந்தாள். தோழியரோடு பொய்கையில் நீராடி தேவியை வணங்கினாள். தனக்குத் தகுந்த வரன் கிடைக்கவேண்டும் என்பது அவள் வேட்கை.

தோழியருள் ஒருத்தி, பொழிலழகில் ஈடுபட்டு அதைச் சுற்றிப் பார்க்கப் போனவள், ஒருசார் இராம இலக்குவரைக் கண்டு, அச்செய்தியைக் கூற மகிழ்ச்சியுடன் சீதைபால் ஓடிவந்தாள். மெய்புளகம் போர்ப்ப, விழிகளில் ஆனந்தம் பூப்ப ஓடிவந்த தோழியை, மற்றைத் தோழியர் சூழ்ந்துகொண்டு "செய்தி என்ன?" என்று வினவினர்.

"அழகர் இருவர் பொழிற்கண் உள்ளனர். இளவயதினர்; கண்கவர் வனப்பினர். ஒருவர் நிறம் கருமை. மற்றவர் நிறம் செம்மை. அவர் அழகை நான் எவ்வாறு புகழ்வேன்! என்கண்கள் கண்டன. கண்ட கண்களே கூறினால் ஒருவாறு கூறலாமோ என்னவோ! ஆனால், கண்களுக்கு நாக்கு இல்லையே! வாய்க்கு நாக்கு உண்டு. இருந்தும் என்பயன்? வாய்க்குக் கண் இல்லையே! ஆதலால், அவர் அழகை எப்படி விளக்குவது?" என்றாள்.

தேக்கன பாக குமர துயி ஆயே!
வய கிஸோர ஸப பாந்த்தி ஸுஹாயே!!
ஸ்யாம கௌர கிமி கஹவும் பக்கானி!!
கிரா அனயன வசன பினு பானி!!

அப்போது ஒரு தோழி, "நேற்று ஒரு முனிவரின் பின்னே, அரச குமரர் இருவர் நம் நகருக்கு வந்துள்ளனராம். அவரைக்கண்ட ஆண்-பெண்கள் அனைவரும் அவர்கள் அழகிலே மயங்கிப் போயினராம். இருவரிலும் கரிய நிறம் படைத்த காளை பேரழகனும். 'கரியானைக்காணாத கண்என்ன கண்ணே!' என்று அனைவரும் பேசிக்கொள்கின்றனர்" என்று கூறினாள்.

தோழியின் சொல் கேட்ட சீதை, அவ்வழகுருவனைக் காண அவாவுற்றாள். அவள் உள்ளத்தில் மறைந்திருந்த—ஒருவரும் அறியாத—பழங் காதல் புத்துயிர் பெற்றது.

"ப்ரீதி புராதனி லக்கயி ந கோயீ"

பிரிந்தவர் கூடும் காலம் வந்துவிட்டது. மருண்ட மான் குட்டி போல, அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே, தோழி முன் செல்லப், பின் சென்றாள் சீதை.

சீதையின் கைவளை, காற்சிலம்பு கலீரெனும் ஓசை இராமன் செவியிலே பட்டது. ஒலி வந்த திசை நோக்கினான். அழகுத் தெய்வத்தைக் கண்டான். சந்திரனைக் கண்ட சகோரம் போல, இமைப்பதும் மறந்து இரு கண்ணின் முகத்தழகு பருக நோக்கினான். சீதையின் அழகு, அழகுக்கும் அழகாக இருந்தது. அழகு மாளிகையின் ஒளி விளக்காக இருந்தாள் அவள்.

"ஸுந்தரதா வஹம் ஸுந்தர கரயி
சபி க்ருஹ தீபசிகா ஜநு பரயி".

கவிஞர்கள் சீதைக்கு உவமை தேடித் தேடிக் களைத்துப் போயினர்.

"ஸப உபமா கவி ரஹே ஜுட்டாரி
கேஹி படதரவும் பிதேக குமாரி"

கடைசி பக்கம் பார்க்க

## எட்டயபுரம் கவிஞர்களும் கலைஞர்களும்

# 6. பிச்சாண்டிப் புலவர்

[ கி. முத்துராமகிருஷ்ணன் ]

எட்டயபுரம் மன்னர்கள் அதிகமான வேட்டைப்பிரியர்கள். அவர்களிடம் துப்பாக்கி, வேட்டைக் கென்ற உயர்ந்த நாய்கள் முதலியன உண்டு. குருமலையில் அடர்ந்த காடு உண்டு. இதே போன்று சாலிகுளம் என்ற பகுதியும் காடுகள் அடர்ந்த பகுதியாகும். மரங்கள் வானளாவி இருக்கும். முட்களும் புதர்களும் எங்கும் நிரம்பி இருக்கும்.

மன்னர் தனது படைகுடிகள் வேட்டைக்காரர்கள் யாவருடனும் சாலிகுளம் செல்கிறார். வேட்டைக்கு புறப்படும் முதல் நாள் இரவே வேட்டைக் குழல்ஊதி வேட்டைக்காரர்களுக்கு செய்திகள் தெரிவித்து விடுவார்கள்.

மன்னர் பல்லக்கில் செல்கிறார்கள். இருமருங்கிலும் வீரர்கள்வருகிறார்கள். பரிவட்டம் மற்றும் குடிபடைகள் செல்கிறார்கள் என்று வார்த்தையால் நாம் வர்ணனை செய்கிறோம். கவிஞனின் கண் விநோதமாக வினயமாகப் பார்க்கும். அதனையே காவியமாக தீட்டுவார்கள். அதனைக் கேட்க இதோ உங்களையே அழைத்துச் செல்கிறேன்.

வாலிமரம் ஏழுறுவ வாலி தொட்ட குமாரஎட்ட
    மன்னன் இன்னான்
சாலிகுளம் முயல்வேட்டைக்கு எழுந்தருளும்
    பெரும்பேச்சுத் தாக்கல்கேட்டு
மேலினிமையான சசி கோட்டைவிட்டு
    மனம்வெறுவி, விரைசிட்டோடி
ஆலின் அமுதுண்ட கரைகண்டர் சடைக்காடு
    புகுந்து அமர்ந்திட்டாரே.

சாலிகுளத்தில் அதிகமான மான்களே கிடைக்கும். மன்னர் வேட்டைதனை முடித்து திரும்பினால் அரண்மனைக்கு தேவையானதை எடுத்துக் கொண்டு மீதி உள்ளதனை தன்னுடன் வந்த குடிபடைகளின் வீட்டினருக்கு சமமாக பங்கிட்டுக் கொடுத்து விடுவதே வழக்கமாம்.

எட்டயபுரம் மன்னருக்கு கழுகுமலை, திருநெல்வேலி, திருக்குற்றாலம், சென்னை போன்ற இடங்களில் அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம்வரை தனி அரண்மனைகள் உண்டு.

குற்றாலத்தில் அருவிகளில் நீர் வீழ்ந்து நாட்டு மக்கள் கூடிக்களிக்கும் நேரத்தில் மன்னரும் தன் மனைவி மக்கள், படைகளுடன் சென்று தங்கி வருவது வழக்கமாம். மூன்று மாதம் தங்குவர். ஒருசமயம் குற்றாலத்திற்கு பிச்சாண்டிப் புலவரும் மன்னருடன் சென்று இருந்தார். அச்சமயம் திருநெல்வேலி கலெக்டராகப் பணிபுரிந்த துங்கதுரை என்பவரும் குற்றாலத்தில் தங்கி இருந்தார். துங்கதுரையை மன்னர் அவர்கள் முறைப்படி சென்று பேட்டிகண்டார். குசலம் விசாரித்துக் கொண்டு மன்னர் தன் நிலையம் திரும்புகிறார். தனது மனமகிழ்ச்சியை மக்களுக்கு தெரிவிக்க எண்ணி தன்னுடன் வந்த வீரர்களுக்கும் மந்திரி பிரதானிக்கும் கட்டளையிட்டு சிறிது நாணயங்கள் பொன் தகடு முதலியவற்றை சூறையிடச் சொன்னார். இவர்கள் சூறையிட மக்கள் முண்டியடித்துக்கொண்டு வந்து அதனை எடுத்துச் சென்று மனம் மகிழ்ந்தனர்.

ஒரு நாள் மாலை நேரம் தென்றல் இனிமையாக வீசுகிறது. சில தமிழ் அறிஞர்கள் பேசுகிறார்கள். சிவன் ஏன் மழுவை ஏந்திக்கொண்டு இருக்கிறான் என்பது விவாதத்திற்குரிய பொருள். புலவர் ஒருவர் கூறுகிறார் சிவன் திரிபுரம் எரித்தவன் அதனால் அவர் மழு ஏந்திக்கொண்டு இருக்கிறார் என்று இல்லை, இல்லை சிவன் கையில் எப்பொழுதுமே அக்னி உண்டு அதனால்தான் மழு ஏந்திக் கொண்டு இருக்கிறார் என்கிறார் மற்றொரு புலவர் யாருமே. சரியான விளக்கம் கொடுக்காதது மன்னருக்கு வியப்பாக இருந்தது. தெளிவான பதில் எதுவுமே அவருக்கு கிடைக்காததால் சிறிது உற்சாகக் குறைவாகக் காணப்பட்டார். அங்கு இருந்த பிச்சாண்டிப் புலவர் இதனைக் கவனித்தார். இனியும் தான் சும்மா இருப்பது கூடாது அடாது என்று முடிவு செய்தார். மன்னர் அவர்கள் சமீபத்தில் துங்கதுரையை பேட்டிகண்டு வந்ததினையும் இணைத்து மன்னரின் பரிசைப்பெற விரும்பியே சிவன் மழுவை ஏந்தி நிற்கிறார் எட்டயபுரம் மன்னர்கள் கொடையாளிகள் என்பதை சிவனால் உலகம் உணர்கிறது என்று புலவர் கூறுகிறார்.

நீங்களே கேளுங்கள் பாடலை,

கொங்குலவு குற்றாலதீர்த்தமாடி குழல்வாயழகன்
    கனைவனையும் கும்பிட்டேத்தி
துங்கதுரை கலெக்டர் பேட்டிகண்டு துர்ச்சரை
    வெற்றிகொண்டு தோணவேண
தங்கமொரா அங்கிபூவிராகன் ரூபாய் சாக்
    கெழு எண்ணாரும் நடையில்லாமல்
எங்கள்குமார எட்டவேள் கொடுத்தான் என்று
    ஈசுரனும் கையில் மழுஏந்தினானே.

பாட்டைக் கேட்ட மன்னரும் தமிழ் அறிஞர்களும் புலவரைப் பெரிதும் பாராட்டினார்கள்.

கோவில்பட்டி முன்னாளிலே சிறிய ஓர் ஊர். ஆனால் ரயிலடிகூட கிடையாதநாள் அது. கலெக்டர் போன்ற பெரியவர்கள் வந்து தங்கமட்டும் ஓரிரு பெரிய விடுதி உண்டு. ஒரு சமயம் கலெக்டர் மங்குமாரி துரை என்பவர் கோவில்பட்டியில் வந்து தங்கினார். எட்டயபுரம் மன்னர் பேட்டிக்கு ஏற்பாடு செய்து சென்றார். அக்கால வழக்கப்படி தான் ஆட்சி செய்யும் கிராம எல்லைக்குள் கலெக்டர் வந்தால் ஜமீன்தார் சென்று காண்பது என்பது ஒரு வழக்கம். அதேபோல் இன்றும் செல்கிறார் மன்னர். இதனை புலவர் அவர்கள் விவரிக்கிறார்கள் தனக்கே உரித்தான புதிய பாணியிலே.

பேட்டியின் சிங்காரம் அதிக மவுசு உடையதாக மாறுகிறது. அமரர் கோனே கண்டு பேதலிக்கிறான். மக்கள் என்ன செய்வார்கள். இதனை அவர் வாயிலாக கேட்போம்.

கோட்டிளம்பூ கமுகுயர் வான்நீட்டி
    வனம் சிறந்திலகு கோவில்பட்டி
நாட்டினில் வந்த அதிகாரிமங்கு மாரித்துரையை
    ராஜ போஜன்
தாட்டிகவான் குமார எட்டேந்திர வேந்தன்
    சற்குண சிந்தாமணி சந்தோஷமாக
பேட்டி கண்ட சிங்காரம் கேட்டு அமரர்
    கோனும் பேதித்தானே.

மன்னர் அவர்கள் பிச்சாண்டிப் புலவரை பலமாக போற்றிப் பாராட்டினார்கள். அவருக்கு தேவைக்கு ஏற்ற வசதி செய்துவைத்தார். பிச்சாண்டிப் புலவர் அவர்கள் வளமாக வசதியாக வாழ்ந்து மறைந்தார். இவரது சந்ததியினர் யாரும் இல்லை. இனி அடுத்து கடிகை நமச்சிவாயப் புலவர் பற்றி விளக்குவோம்.

# கேட்டோம்! மகிழ்ந்தோம்!

13—4—68 சனியன்று சித்திரைப் புத்தாண்டு.

சிந்தனைக்கு விருந்தளிக்கத்தொடங்கியது திருச்சி வானொலி நிலையத்தில் நாடக விழா.

13—4—68 முதல் 17—4—68 முடிய ஐந்து நாட்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சுவை. தினுசுக்கு ஒன்று சீரான படைப்புகள்.

**'விஜய விஜயம்'**

பெண்ணுக்கு ஆண்மையும் ஆணுக்குப் பெண்மையும் ஊட்டி வளர்க்கிறார்கள். விஜயா விஜிராஜாவாகவும், பாலச்சந்தர் பாலம்மாவாகவும் தோற்றமளிக்கிறார்கள்.

பெண்பார்க்க மாப்பிள்ளை செல்வதற்குப் பதிலாக மாப்பிள்ளை பார்க்க பெண் செல்கிறாள். மாப்பிள்ளை பார்க்கும் படலம் இந்நாடகத்தின் நகைச்சுவையின் உச்சக்கட்டம். மாப்பிள்ளைக்குப் பாடத்தெரியுமா, பரதம் தெரியுமா, சமையல் தெரியுமா என்றெல்லாம் விஜி பரீட்சை நடத்துவதும் அதற்கு தக்கவிடையை பாலா சொல்லித் தேர்வு பெறுவதும் அபாரம்.

இறுதியில் அண்டை வீட்டுக்காரத் தம்பதிகள் மூலம் திருந்தி ஆண் ஆணாகவும், பெண் பெண்ணாகவும் தங்கள் சுயத் தன்மையை அடைந்து மகிழ்கிறார்கள், மகிழ்ச்சியூட்டுகிறார்கள்.

நகைச்சுவைக் கென்றே தேர்ந்தெடுக்கப் பட்டிருந்த நாடகமாகையால் இயற்கைக்கு மாறாக சிலசம்பவங்கள் மிகைபட அமைந்திருந்த போதிலும் அதனால் ஏற்படும் நகைச்சுவை நன்கு மிளிர்ந்தது.

நாடகத்துறையில் நன்கு பண்பட்ட சிறந்த எழுத்தாளர் திரு. என். ராகவன் இந்நாடகத்தை நன்றாக படைத்திருந்தார். வசன நடையில் சிரமமில்லாமல் எளிமையாக இனிமையும், நகைச்சுவையும் கொப்பளிக்க எழுதியிருந்தது பாராட்டிற்குரியது.

வசனத்தை நன்குணர்ந்து அதில் நடித்தவர்கள் குறைவின்றிச் செய்திருந்தார்கள்.

பிரபல நகைச்சுவை நடிகர் 'சோ' அவர்கள் பாலம்மா பாகத்தை ஏற்றிருந்தார். சிற்சில இடங்களில் அவரது குரல் மங்கி ஒலித்தது. அதிகம் எதிர்பார்த்தது அவரிடம் இருந்து ... கிடைத்தது கொஞ்சமே.

பிரபல திரைப்பட நடிகை மனோரமா விஜயாவின் பாகத்தை ஏற்றிருந்தார். அவரது பாகத்தில் தெரியவேண்டிய கம்பீரமும், ஆணவமும், இறுதியில் பணிவும் நன்கு உணர்ந்து எடுத்துக்காட்டினார். நல்ல நடிப்பு. நகைச்சுவைக்குச் சான்று.

மற்றும், எம். விஸ்வநாதன், வீ. வீரம்மாள், டி. மரியஜோஸப், தெரிஸா சுந்தரம் அனைவரது நடிப்பும் பாராட்டும்படி அமைந்திருந்தது.

திரு. எஸ். வி. பார்த்தசாரதியின் இசையமைப்பு சம்பவங்களுக்கு ஏற்ப ஒலித்து உள்ளத்திற்கு நிறைவூட்டியது.

சிறந்த இந்நகைச் சுவை நாடகத்தைத் திறம்படத் தயாரித்தளித்த கோவிந்தராஜ்அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்.

**வாழ்வெனும் பயணம்**

சரித்திர நாடகம். நந்திவர்மன் ராஷ்டிரக்கூடத்து மன்னனை வென்று அவனது திருக்குமாரி சங்கையை மணந்துகொண்டு காஞ்சிமாநகர் திரும்புகிறான். சங்கை தன் சகோதரன் தேவனை உடன் அழைத்து வருகிறாள். காலம் கழித்து பாண்டியனுடன் தேவன் சேர்ந்துகொண்டு சதி செய்வதை யுணர்ந்த சங்கை அதைத் தடுக்க ஈடுபடும் துணிகர முயற்சியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாடகம்.

நாடக அமைப்பும், வசனமும் சிறப்பாக அமைந்திருந்தது. விறுவிறுப்பும் வீரமும் பளிச்சிட்டது. நாடகம் பூராவும். ஆசிரியை விமலா ரமணி தனது பணியைச் செவ்வனே செய்திருந்தார். உரையாடல் இலக்கிய வாடையுடன் சென்று கொண்டிருக்கும்போது இடையிடையே இன்றைய நடைமுறைப் போக்கிலும் ஒலித்தது. தவிர்த்திருக்கலாம்.

நந்திவர்மனாகத் தோன்றிய "கிம்ஸி ஸ்ரீனிவாசன்" மிக நன்றாக நடித்தார். சங்கை டி. எம். கமலாவின் நடிப்பும் சிறந்து விளங்கியது மற்றும் பங்கு கொண்ட அனைவரும் திறம்பட நடித்தார்கள்.

திரு. எஸ். எஸ். பரமசிவம் பிள்ளையின் இசையமைப்பு பரவாயில்லை.

தயாரித்து அளித்த டி. வி கிருஷ்ணமூர்த்தி தன்பணியை இனிதே முடித்திருந்தார்.

**"குலவிளக்கு"**

ரசிகர்கள் முன்னிலையில் நடைபெற்று ஒலிபரப்பான ஓர் சமூக நாடகம்.

திருச்சி தேவர் மன்றத்தில் ஆயிரக் கணக்கான ரசிகர்கள் முன்னிலையில் ஸ்ரீ தேவி நாடகசபா குழுவினர் குல-விளக்கை அரங்கேற்றி மகிழ்வித்தனர். பாராட்டைப் பெற்றனர்.

நாடகத்தின் விறுவிறுப்புக் குன்றாமல் அதை ஒலிபரப்பி மற்றவர்கள் கேட்டு ரசிக்கும்படி செய்திருந்த ஏற்பாடு மிகவும் பாராட்டத்தக்கது.

நாடகம் நன்கு அமைந்திருந்த போதிலும் நாடகத்தின் முடிவு ஏனோ நாடகத் தலைப்புக்கு ஒத்துவரவில்லை. "குலவிளக்கு" என்பது ஓர் குலத்திற்கு பரம்பரையாக அவர்கள் சந்ததியினரால் ஏற்றிப் போற்ற வேண்டிய ஒன்று என்பதைத்தான் அனைவரும் உணர முடியும். ஆனால் நாடகத்தில் இறுதியில் குலவிளக்கை உடைய பாத்தியமுடைய குடும்பத்திற்கு எந்த வகையிலும் உறவு இல்லாத ஓர் தம்பதி குலவிளக்கை ஏற்றிவைத்து வழக்கத்தைத் தொடரவைக்கச் செய்திருந்தது பொருத்தமாக இல்லை.

முத்தையன்தான் கோவிலில் சுடர் விடும் குடும்ப விளக்கிற்குச் சொந்தக்காரன். சந்தர்ப்பவசத்தால் கொலைக் குற்றம் அவனைச்சார தூக்குதண்டனை அடைகிறான். ஆனால் சிறைக்கூடத்தில் இருக்கும்போதே தன் காதலி கீதாவையும் மணந்து கொள்கிறான். ஆனால் குலவிளக்கை ஏற்றும் பொறுப்பை வக்கீல் அருண் தம்பதிகள் ஏற்றுக் கொள்கிறார்கள். இது வழக்கத்திற்கு ஒத்துவராத கருத்து.

நாடக ஆசிரியர் முழக்கம் பாலு இந்த முடிவை வேறுவிதமாக அமைக்க முயன்றிருக்கலாம். அவருடைய சிறந்த நாடக அமைப்பும் உணர்ச்சிகரமான உரையாடலும் இந்த முடிவினால் சற்று குறைபடுகிறதாகவே தோன்றுகிறது.

வேண்டுமென்றே ஒருவரைக் கொலைசெய்ய விரும்பாத முத்தையன் சந்தர்ப்பவசத்தால் ஒருவரைத் தள்ள அவர் இறக்க அதற்காக ஒருவனுக்கு தூக்குதண்டனை அளிப்பது மிகை. குறைந்தது ஏழு ஆண்டுகளோ இல்லையெனில் அதிகபட்சமாக ஜன்ம தண்டனையோ அளித்து அவன் நினைப்பிலேயே வாழும் அவனது மனைவி கீதா குலவிளக்கையேற்றி வைக்கிறாள் என்று முடித்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே!

வக்கீல் அருணாக நடித்த கே. என். சிவகாளத்தி மிக நன்றாக நடித்தார். முத்தையனாகத்தோன்றிய அழகுநம்பி பரவாயில்லை. கீதாவாகப் பங்கேற்ற K. R. ராஜாமணி சிறப்பாக நடித்தார்.

நாடகத்தில் உணர்ச்சி மிகுந்த கட்டங்கள் பல நன்குஉருவாகியிருந்தது. அதனை அனைவரும் உணர்ந்து நடித்துப் பாராட்டை நேரிலும், வானொலியிலும் பெற்றார்கள்.

மொத்தத்தில் தேவி நாடகசபா குழுவினர் ஓர் நல்ல நாடகத்தை நமக்கு அளித்தார்கள்.

---

கடைசி பக்கம் பார்க்க

# வாழைப்பழத் தோல்...





மிதித்தால் வழுக்கி விடும். ஆதலால் தோலை எடுத்து குப்பைத் தொட்டியில் எறியுங்கள். ஆனால் பழத்தையல்ல.

வாழை, எலுமிச்சை, பப்பாளி, கொய்யா, திராட்சை போன்ற பழங்களைச் சுலபமாகப் பயிரிடலாம். உங்கள் வீட்டைச் சுற்றி கொஞ்சம் இடமிருந்தால் போதும். இந்தப் பழங்களில் கால்சியம், ஃபாஸ்போரஸ் போன்ற தாதுச் சத்துக்களும், ஏ, பி. சி, வைட்டமின்களும் நிறைய உள்ளன.

பழங்களைப் பயிரிட முயலுங்கள் — முயற்சி உடன் பலனளிக்கும்.



உங்கள் புழைக்கடையில் சில பழங்களைப் பயிரிடுவது மிகவும் அவசியமாகும்.

இதுபற்றி மேலும் விவரங்களுக்கு, சமுதாய நல மேம்பாட்டுத் தொகுதியின் விவசாய நல விஸ்தரிப்பு அதிகாரியையோ அல்லது தோட்டக்கலை இலாகாவையோ நீங்கள் அணுகலாம்.

சமச்சீரான உணவுக்குப் பழங்கள் மிகவும் தேவை

davp 67/498

## 6-ஆம் பக்கத் தொடர்ச்சி

### "இன்பம் எங்கே"

ஓர் நையாண்டி நாடகம். நகைச் சுவையும் உண்டு. எஸ். டி. சுந்தரம். எம். எல். ஏயின் நல்ல படைப்பு.

மண்ணுலகில் மனிதனாகப் பிறந்தவன் எவனும் விரும்புவது அமைதி, ஆனந்தம் அதற்காக மனிதன் படும் பாடு எத்தனை? இன்பம் பெறுவது எப்படி? இந்த அடிப்படைக் கருத்தை மிகத் தெளிவாக நாடகமாக்கியிருந்தார் ஆசிரியர். உரையாடல்கள் மிகச் சிறந்து விளங்கின. இடையில்ஒலித்த ஓர் பாடலும் அதற்கு அமைத்திருந்த இசையும் இன்னும் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன

சாந்த மூர்த்தியாக நடித்த எம். எஸ். ரமணி அற்புதமாக நடித்தார். அவரது குரலில்தான் எத்தனை குழைவு! கம்பீரம்! சண்ணுகத் தோன்றிய நெய்வேலி ஏ. ராஜேந்திரன் நன்ருகச் செய்தார் தன் பாகத்தை. கலைவாணியாகப் பங்குபற்றியஎம். சுசிலாவின் நடிப்பு பிரமாதம். மற்றும், கே. வி. ஸ்ரீனிவாசன், கே. விஜயா முதலானோரின் நடிப்பும் நன்கு அமைந்திருந்தது.

அங்கமாலி சே. ஜே. ஜோஸ் இசை அமைப்பு புதுமையும் பொலிவும் பெற்று விளங்கியது.

தென்னூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி உதவிபுரிய திரு. கோவிந்தராஜ் அவர்கள் இந்நாடகத்தை சிறப்பாகத தயாரித்திருந்தார்கள். ஒலி நாடகத்திற்கு வேண்டிய உத்திகள் அத்தனையும் இந்நாடகத்தில் அமைந்திருந்தன மிகச் சிறந்த நாடகம்.

### தொடர் கதை

கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் ஓர் சிறுகதையை ஏ. நடராஜன் அவர்கள் நாடகமாக அமைத்து தயாரித்தளித்தார்.

கலைஞரின் கதை, உரையாடல் என்ருல் கவர்ச்சிக்குக் குறைவா என்ன? அத்தனை பெரும் மயக்கத்தை ஏற்படுத்தும் வல்லமை அவரது எழுத்துக்கு உண்டல்லவா? அது இந்நாடகத்திலும் ஒலித்தது.

நாடகம் நடந்த ஒருமணி நேரம் சென்றதே தெரியவில்லை. அத்தனை விறுவிறுப்பு அடுத்தடுத்துசம்பவங்கள்.

காதல் மனிதனின் அடிப்படை உணர்வு. அதனுல் இன்பமும் உண்டு. துன்பமும் குறைவின்றிச் சூழும். இருந்தாலும் அது மனித வாழ்வில், வர்க்கத்தில் மாறிமாறி நிறைவதும், குறைவதுமாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. அதுவே தொடர் கதை.

நன்கு சித்தரிக்கப்பட்டிருந்த கதை. அதில் பங்குபெற்ற நடிகர்கள் தங்கள் திறனை நன்கு காட்டியிருந்தனர்.

சந்தனமாக நடித்த டி. வி. கிருஷ்ண மூர்த்தி மிக நன்ருக நடித்தார். குமுதாவாக நடித்த டி. சந்திர காந்தா அதற்குத் தகுந்தபடி ஈடு கொடுத்தார்.

மற்றும் வி. மஹாலிங்கம், கே. என். சிவகாளத்திநாதன், கரு. செல்லமுத்து, டி. எஸ். எம். சுந்தரம், டி. எஸ். பகவதி அனைவரது நடிப்பும் பாராட்டும்படி இருந்தது.

நாடகத்தில் 'எபக்ட்ஸ்' நன்கு கையாளப்பட்டிருந்தது தனிச்சிறப்பு. உணர்ச்சிகரமான கட்டங்கள் உண்டு. அவை சிறந்து வீளங்கின. பகுத்தறிவிற்கு ஒத்துவராத கருத்துக்களும் சில உண்டு. அவற்றை தவிர்த்திருக்கலாம்.

ஓர் கொலை, இரண்டு தற்கொலை நிறைந்த இந்நாடம் ஓர் சோக நாடகம்.

அங்கமாலி கே. ஜே. ஜோஸ் நன்கு இசையமைத்திருந்தார்.

திரு. ஏ. நடராஜ் அவர்கள் ஜனரஞ்சகமான ஓர் சிறந்த நாடகத்தை தயாரித்தளித்து பெருமை பெறுகிருர்.

நன்கு நடந்து முடிந்த நாடகவிழாவில் குறைகளும் உண்டுதான். மொத்தம் நடைபெற்ற ஐந்து நாடகங்களில் மூன்றில் கொலைச் சம்பவங்கள் பிரதானமளித்தன. நகைச்சுவை ஒன்றுதான். நாடக அமைப்புகள் வழக்கமான உத்திகளிலேயே அமைந்திருந்தன. புதிதாக வானொலி நாடகங்கள் அமைக்க வேண்டிய உத்திகளுக்கு உதாரணமாக சிலநாடகங்களையாவது உருவாக்கி அளித்திருந்தால் வானொலி நாடகங்களின் புது அத்தியாயம் தொடங்க உதவியாக இருக்குமே என்பது பெருங்குறை.

ஐந்து நாடகங்களில் வானொலி நாடகத்தின் உத்திகள் அனைத்தும் உள்ளடக்கி ஒலித்த நாடகம் இன்பம் எங்கே? அதைத் தயாரித்தவர் திரு. கோவிந்தராஜ்.

பெரும் பகுதி ரசிகர்களைக் கவர்ந்து மகிழ்வூட்டிய ஜனரஞ்சக நாடகம், கலைஞர் கருணாநிதி அவர்களின் 'தொடர் கதை', அதைத் தயாரித்தளித்தவர் திரு. ஏ நடராஜன்.

இருவரும் பாராட்டுக்குரியவர்கள். அவர்கள் இன்னும் வானொலி நாடகங்கள் பல பல கோணங்களில் தயாரித்தளித்து ரசிகர்களை மகிழ்விக்க வாழ்த்துகிருேம்.

ரா. நீலமேகம்.

---

## 4-ஆம் பக்கத் தொடர்ச்சி

இராமன் இலக்குவனை நோக்கி, "தம்பி, இரகு குலத்தவர் மனம் புறநெறி போகாது. என் மனம் கனவிலும் அயல் மாதரை நினைந்ததில்லை. என் மனத்தின்மேல் எனக்கு அளவிறந்த நம்பிக்கை உண்டு.

ஏகும்நல்வழி; அல்வழி என்மனம்
ஆகுமோ? இதற்கு ஆகிய காரணம்
பாகு நேர்மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும். மற்றுஇதற்கு ஐயுறவு இல்லையே"

என்று கூறினுன். வாயானது இலக்குவனுடன் பேசிக் கொண்டிருந்ததே தவிர, கண்களோ மலர்கண்ட வண்டுகளாயின. முகமலரின் அழகுத் தேனைப் பருகிய நோக்கெனும் பாசத்தால் சீதையைப் பிணித்துக்கொண்டிருந்தான் இராமன். இந்நிலையில் சீதையின் கண்கள் இராமன்மீது பட்டன. சீதையோ இழந்தன பழந்தனம் எதிர்ந்தவரை ஒத்தாள்.

"ஹரவே ஜனு நிஜநிதி பஹிச்சானே"

இராமன் அழகிலே கண்கள் பதிந்துவிட்டன. இமைகள் இமைத்தலை மறந்தன. காதல் கரைபுரளத் தன் உடலை மறந்தாள். சந்திரனை முழுமையாகக் கண்ட சகோரப் புள்ளைப்போல, இடைவிடாது நோக்கினுள். "கண்வழி புகுவதோர் கள்வனே கொலாம்!" என்று கண்வழி அடைத்து இராமனைக் கருத்துச்சிறையில் அடைத்தாள்.

"லோசன மக ராமஹிம் உர ஆனி
தீன்ஹேம் பலக-கபாட ஸயானி"

அன்பெனும் கையினுல் அகபடாத்
இன்புடை இராமனை எழுதிக் [திலே
[கொண்டனள்,

"பரம ப்ரேம மய ம்ருது மஸி கீன்ஹீ
சாரு சித்த பீதி லிக்கி லீன்ஹீ"

தோழிகளின் வற்புறுத்தலினுல் அவ்விடம் விட்டு மீண்டும் பார்வதி தேவி ஆலயம் சென்ருள். தான்கண்ட அழகனை அடைய, சங்கரனுர் வில் தடையாகக் கூடாதே என்று தேவியைப் பலவாறு துதித்து வணங்கினுள். தேவியும் மகிழ்ந்து சீதையை நோக்கி "ஹே! சீதா! உன்மனம் எந்த வரனை விரும்பிற்ருே, அதே வரன் உனக்குக் கிடைப்பான்" என்று ஆசி கூறினுள்.

கம்பன் கூறும் காதற்காட்சியைத் துளசியும் கையாள்கிருர். அதில் கம்பன் கருத்துக்கள் பல இடம் பெற்றுள்ளன. இதைப் போன்றே கம்பனை அடியொற்றிச் செல்லும் இடங்கள் பல துளசிதாசரின் "ராமசரித மானஸம்" என்ற இராமாயணத்தில் உண்டு. வாழ்க கம்பன்! வாழ்க துளசி!

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press,
24, Theradi Bazaar, Tiruchirapalli-2.